**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.270/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw5/Pw2 |
| Name | : சதாசிவம் |
| Father/Husband's Name | : வேலாயுதம் |
| Village | :செங்கல்பட்டு |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.05.2026.

**முதல் விசாரணை:**

1. நான் கூலி வேலை செய்து வருகிறேன். பிப்ரவரி மாதம் 2016 ல் சத்யா என்பவரின் செயினை அறுத்ததாக தகவல் சொன்னார்கள். நான் அவர்களுடன் செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். எதிரியை நான் பார்த்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. செட்டிபுண்ணியம் கூட்ரோடு அருகே போலீசார் வரைப்படம் வரைந்து இரு நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். அதில் ஒரு நபரின் பெயர் பூபாலன். வெகு நாட்கள் ஆனதால் அவரை என்னால் அடையாளம் காட்ட இயலாது. அந்த திருடிய நகைகளை அவர்களுடைய உறவினர் வீட்டில் அஞ்சூரில் வைத்திருப்பதாக சொன்னதின் பேரில் போலீசார் என்னை அழைத்து சென்றார்கள். அங்கு புதைத்து வைத்திருந்த நகைகளை எடுத்தார்கள்.

2. போலீசார் விசாரணை செய்யததால் எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டு கையெழுத்து வாங்கினார்கள். நானும் ஆரோக்கியராஜீம் கையெழுத்து

போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலதநத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்தகைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையெழுத்து போட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் சொன்னார்கள். இதற்கு முன் சாட்சியம் அளிக்கும் போது எதிரியின் அடையாளம் தெரியாது என்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். சாட்சியாக இருக்கும் படி கையெழுத்து போட்டேன் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து படம் வரைந்தார்களா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu